|b09291 43jenseF (English)

|c09291_000_43jense.xml (Task 179127)

|v1

ஞாயிறு காலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு காலைக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

பரிசுத்த ஆவியும் வெளிப்படுத்தலும்

|v6

சாட்சி

|v7

பரிசுத்த ஆவி

|v8

வெளிப்படுத்தல்

|v9

ஜெபம்

|v10

மார்மன் புத்தகம்

|v11

*இயேசு கிறிஸ்து*

|v12

*பொது மாநாடு*

|v13

*பரிசுத்த ஆவியும் வெளிப்படுத்தலும்*

|v14

*மூப்பர் ஜே இ. ஜென்சன்*

|v15

*எழுபதின்மரின் தலைமை*

|v16

*தேவத்துவத்தின் மூன்றாவது அங்கத்தினராகவும் பிதாவுடனும் குமாரனுடனும் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், அவர் சகல காரியங்களையும் அறிந்திருக்கிறார்.*

|v17

*சுமார் ஒரு ஆண்டாக ஊழியக்களத்தில் ஒரு இளம் மூப்பராக நானிருந்தபோது, வெளிப்படுத்தலையும் பரிசுத்த ஆவியையும்பற்றி, வேதப்புத்தகங்களிலும் பிற்கால அப்போஸ்தலர்கள் எழுதியவற்றையும் படித்தபோது எனக்கு ஒரு அதிர்ச்சியான விழிப்புணர்வு ஏற்பட்டது: எனக்கென்று ஒரு சாட்சி, குறிப்பாக பிதாவையும் குமாரனையும்பற்றிய ஒரு சாட்சி எனக்கிருந்ததில்லை. எனது அற்புதமான பெற்றோரின் சாட்சியைச் சார்ந்தே நான் எனது ஊழியத்திற்குப் போனேன். அவர்களின் வார்த்தைகளில் எந்த சந்தேகமுமில்லாமல், ஆவிக்குரிய எனது சொந்த சாட்சியைத் தேடுவதைப்பற்றி நான் நினைத்துப் பார்க்கவில்லை. **1962** ஆம் ஆண்டில் டெக்சாஸின் சான் அன்டோனியாவில் ஒரு பிப்ருவரி மாத இரவில், நானே அதை அறிந்துகொள்ளவேண்டுமென எனக்குத் தெரிந்தது. நான் அமைதியாக ஜெபித்து, “பரலோகப் பிதாவே, நீர் இருக்கிறீரா? நானே அதை அறிந்துகொள்ள வேண்டும்” என உரத்த சத்தத்தில் வேண்டுவதற்கு நான் தனிமையிலிருக்க, எங்கள் சிறிய குடியிருப்பிலிருந்த ஒரு இடத்தை நான் கண்டுபிடித்தேன்.*

|v18

*அந்த இரவில் சிறிது நேரத்திற்குப்பின், தேவனும் இயேசுவும் உண்மையிலிருக்கிறார்கள்  என்பதை எனது வாழ்க்கையில் முதல் முதலாக நானே அறிந்துகொண்டேன். ஒரு குரலையும் நான் கேட்கவில்லை, ஒரு பரலோக நபரையும் நான் பார்க்கவில்லை. “பரிசுத்த ஆவியின் சொல்லிமுடியாத வரத்தால்” (கோ.உ 121:26), வெளிப்படுத்தலின் ஆவியால் (கோ.உ 8:1--3 பார்க்கவும்), எனது மனதிற்குள் பேசிய சமாதானத்தால் (கோ.உ 6:23 பார்க்கவும்) எனது இருதயத்திற்கு உறுதிப்பாட்டினால் (ஆல்மா 58:11 பார்க்கவும்) நீங்கள் அறிந்துகொண்ட அதே வழியிலேயே நானும் அறிந்துகொண்டேன்.*

|v19

*“(அவரது) வார்த்தைகளை வைத்து ஒரு சோதனை செய்யுமளவும், (எனது) புலன்களை எழுப்பி உணர்ச்சி கொள்ளச் செய்ய” (ஆல்மா 32:27)  அந்த அனுபவத்திலிருந்து ஆல்மாவின் ஆலோசனையின் பலன்களை நான் பார்த்தேன். இந்த வார்த்தைகள் அல்லது விதைகள் மரங்களாக வளர்ந்து, உண்மையில் சாட்சியின் கூடுதல் மரங்களாக வளர்ந்தன. பரிசுத்த ஆவியின் மூலமாகவும் பரிசுத்த ஆவியாலும் வந்த வெளிப்படுத்தலின் அடிப்படையில் வார்த்தையின் மேல் அதிக சோதனைகளால் இந்த செயல் தொடர்ந்து, அதன் விளைவாக கூடுதலான சாட்சியின் மரங்களாகி, இப்போது ஒரு உண்மையான காடாகியது.*

|v20

*பரிசுத்த ஆவி ஒரு விரும்பத்தக்க வரம்*

|v21

*இரட்சகர் அமெரிக்காவிற்குச் சென்றபோது, பன்னிரண்டு சீஷர்களை அவர் அழைத்தார். பரிசுத்த ஆவியைப்பற்றியதே அவர்களுக்கும் மக்களுக்கும் அவர் கொடுத்த செய்திகளில் ஒன்று. அவர்களுக்குப் போதித்தபின், இரட்சகர் புறப்பட்டுப்போய் அடுத்த நாள் திரும்ப வருவதாக வாக்களித்தார். அவர் பேசுவதைக் கேட்க, அவர்களால் முடிந்தவரை அதிகமானோரை கூடிவரச் செய்ய மக்கள் இரவு முழுவதும் உழைத்தார்கள்.*

|v22

*இரட்சகர் போதித்தவற்றை மக்களுக்குப் போதிக்க சீஷர்கள் அவர்களை 12 பிரிவுகளாக கூட்டிச்சேர்த்தார்கள். இந்த வார்த்தைகளால் நிருபணமான பரிசுத்த ஆவியின் முக்கியத்துவமானது அவர்களது போதனைகளுக்கு மத்தியில் மிகச் சிறந்தவையாயிருந்தன (3 நெப்பி 11--18 பார்க்கவும்). பின்னர் மக்கள் முழங்கால்படியிட்டு ஜெபித்தார்கள். பரிசுத்த ஆவி கொடுக்கப்படவேண்டுமென்பதே அவர்களின் இருதய வாஞ்சையாயிருந்தது (3 நெப்பி 19:8--9 பார்க்கவும்).*

|v23

*இரட்சகர் அவரது பிதாவிடம் ஜெபித்தபோது, அவர்களுக்கு அவர் தோற்றம
ளித்து பரிசுத்த ஆவியின் முக்கியத்துவத்தைப்பற்றி பலப்படுத்தினார்:*

|v24

*“பிதாவே, நான் தெரிந்துகொண்ட இவர்களுக்கு நீர் பரிசுத்த ஆவியானவரை அளித்தற்காக உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன்: . . .*

|v25

*“பிதாவே, அவர்களுடைய வார்த்தைகளை நம்புகிற யாவருக்கும் நீர் பரிசுத்த ஆவியானவரை அளிக்கும்படி உம்மை வேண்டுகிறேன்” (3 நெப்பி 19:20--21)*

|v26

*“பரிசுத்த ஆவியின் வரமே, மனிதர்கள் மேல் அருளப்படுகிற மகத்தான வரம். . . . .*

|v27

*அது மனிதர்களுக்கு, அப்போஸ்தலர்களுக்கு, தீர்க்கதரிசிகளுக்கு மட்டுமே க
ட்டுப்படுத்தப்படவில்லை; அது விசுவாசமிக்க  ஒவ்வொரு ஆணுக்கும் பெண்
ணுக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ள போதுமான வயதுவ
ந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் அது சொந்தமாயிருக்கிறதென” தலைவர் வில்பர்
ட் உட்ரப் ஏன் சொன்னார் என்பதை இந்த மார்மன் புத்தகத்தின் நிகழ்ச்சியின் அடிப்படையில் நான் நன்றாகப் புரிந்துகொண்டேன்* (*Teachings of Presidents of the Church: Wilford Woodruff* (2004), 49).

|v28

*தேவையான நேரங்களில் வெளிப்படுத்தல் பதில்களைக் கொடுக்கிறது*

|v29

*தேவத்துவத்தின் மூன்றாவது அங்கத்தினராகவும் பிதாவுடனும் குமாரனுடனு
ம் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், அவர் சகல காரியங்களையும் அறிந்திரு
க்கிறார் (கோ.உ 35:19; 42:17 பார்க்கவும்). அவருக்கு ஏராளமான முக்கியமா
ன பாத்திரங்கள் இருக்கின்றன, (கோ.உ 11:12 பார்க்கவும்). அவைகளுக்குள்
ளே மிக முக்கியமானது பிதாவைக் குறித்தும், குமாரனைக் குறித்தும் அவர் சா
ட்சி பகருகிறார் (3 நெப்பி 28:11 பார்க்கவும்). சகலவற்றின் சத்தியத்தையும் அ
வர் வெளிப்படுத்துகிறார் (மரோனி 10:5 பார்க்கவும்); நன்மை செய்ய  அவர் நடத்துகிறார் (கோ.உ 11:12 பார்க்கவும்) என்பவை அவரது பிற பாத்திரங்கள்.*

|v30

நன்மை செய்பவராயிருக்க தலைவர் மான்சன் எடுத்துக்காட்டாய் இருக்கிறார். “நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்து” (அப்போஸ்தலர் 10:38) இரட்சகரின் எடுத்துக்காட்டை அவர் பின்பற்றுகிறார். பரிசுத்த ஆவியிடமிருந்து வருகிற ஒரு உந்துதலை உதாசீனப்படுத்தாதிருப்பதன், ஒருவரைப்போய் சந்திப்பதன், அவர்களுக்கு ஊழியம் செய்வதன் மற்றும் ஒருவரை காப்பாற்றுவதன் முக்கியத்துவத்தைப்பற்றி அவர் போதித்தார்.

|v31

ஆனால் சிலசமயங்களில் தேவையிருக்கும்போது ஊழியம் செய்ய, தலைவர் மான்சனோ, வீட்டுப்போதகரோ, கவனித்துக்கொள்ளும் ஒரு சகோதரியோ கிடைப்பதில்லை. அந்த சூழ்நிலைகளில், பரிசுத்த ஆவியின் மற்றொரு பாத்திரமான தேற்றரவாளரிடமிருந்து ஆறுதலையும் வழிநடத்துதலையும் நான் கண்டிருக்கிறேன் (கோ.உ 36:2 பார்க்கவும்).

|v32

ஏராளமான பிறவிக் குறைபாடுகளுடன் எங்கள் பேரனான குயின்டன் பிறந்து, ஒரு ஆண்டுக்கு மூன்று வாரங்கள் குறைவான நாட்கள்வரை உயிரோடிருந்தான். அப்போது மருத்துவமனைக்கு வெளியிலும் உள்ளேயுமாக அவனிருந்தான். அந்த நேரத்தில் சகோதரி ஜென்சனும் நானும் அர்ஜென்டினாவில் வசித்துவந்தோம். அவர்களுக்கு ஆறுதலாக இருக்கவும், அவர்களால் ஆறுதல்படவும், உண்மையில் எங்கள் பிள்ளைகளோடு நாங்கள் அங்கிருக்க விரும்பினோம். நாங்கள் நேசித்த அவனுக்கருகிலிருக்க விரும்பிய இவன் எங்கள் பேரப்பிள்ளை. எங்களால் ஜெபிக்கமட்டுமே முடிந்தது, அதிக ஊக்கமுடன் நாங்கள் ஜெபித்தோம்!

|v33

குயின்டன் மரித்துவிட்டான் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்தபோது சகோதரி ஜென்சனும் நானும் ஊழியத்தின் ஒரு பயணத்திலிருந்தோம். கூடும் அறை ஒன்றின் பாதையில் நின்றுகொண்டு நாங்கள் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு ஆறுதல்படுத்தினோம். எல்லா புத்திக்கும் மேலான ஒரு சமாதானமான ஒரு உறுதிப்பாடு பரிசுத்த ஆவியிடமிருந்து எங்களுக்கு வந்து அது இன்றுவரை தொடர்ந்திருக்கிறதென நான் உங்களுக்கு சாட்சியளிக்கிறேன் (பிலிப்பியர் 4:7 பார்க்கவும்). பெரிய விசுவாசம், சமாதானம், ஆறுதலுடன் இன்றுவரை அந்த சமயத்தைப்பற்றிப் பேசுகிற எங்கள் மகன், மருமகள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியின் சொல்லிமுடியாத ஈவை நாங்கள் பார்த்தோமென்றும் நாங்கள் சாட்சியளிக்கிறோம்.

|v34

வெளிப்படுத்தலும் மார்மன் புத்தகமும்

|v35

*வெளிப்படுத்தலின் அதே வரம் மார்மன் புத்தகத்தைப்பற்றிய எனது சாட்சியை தீவிரப்படுத்தியது. மீண்டும் மீண்டும் அதை நான் வாசித்து, படித்து ஆராய்ந்து, ருசித்தேன். அதன் சத்தியத்தையும் தெய்வீகத்தையும் பரிசுத்த ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார்.*

|v36

*சபையின் நான்கு முக்கியமான மூலைக்கற்களில் மார்மன் புத்தகம் ஒன்றென தலைவர் கார்டன் பி.ஹிங்கிலி அழைத்தார். ஜோசப் ஸ்மித்தின் முதல் தரிசனம், ஆசாரியத்துவத்தின் மறுஸ்தாபிதம் மற்றவைகளாயிருந்து, இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நமது சாட்சி மிக முக்கிய மூலைக்கல்லாயிருக்கிறது (எபேசியர் 2:19--21 பார்க்கவும்). "பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபைக்கும் தனிப்பட்ட சாட்சிகளுக்கும், அங்கத்தினர்களின் ஒப்புக் கொடுத்தலுக்கும், நங்கூரமிடுகிற அசைக்க முடியாத மூலைக்கற்கள் தேவன் கொடுத்த நான்கு மாபெரும் இந்த வரங்களாகும் என அவர் விளக்கினார்* ("Four Cornerstones of Faith," *Liahona*, Feb. 2004, 7).

|v37

*தேவன் கொடுத்த இந்த நான்கு வரங்களும் எனது விசுவாசத்திற்கும் சாட்சிக்கும் நங்கூரமாயிற்று. ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியின் மூலமாக வெளிப்படுத்தலால் எனக்கு உறுதியளித்தன. ஆயினும் சில நிமிடங்களுக்கு, முதல் தரிசனம் மற்றும் மார்மன் புத்தகம் ஆகிய இந்த இரண்டு மூலைக்கற்களின் வரங்கள் மேல் கவனம் செலுத்த நான் விரும்புகிறேன். நற்கீர்த்தி பெற்ற பெற்றோருக்குப் பிறந்து, அவர்களால் நன்றாகப் போதிக்கப்பட்ட ஒரு குடும்ப அமைப்பில் ஒவ்வொன்றும் ஆரம்பமாகிறது (1 நெப்பி 1:1 பார்க்கவும்). லேகி மற்றும் ஜோசப் ஸ்மித்தின் வாழ்க்கையின் சம்பவங்கள் ஒவ்வொன்றும் ஒத்திருக்கின்றன (1 நெப்பி 1 மற்றும் ஜோசப் ஸ்மித்--வரலாறு 1 பார்க்கவும்).*

|v38

•

|v39

• *ஒவ்வொருக்கும் ஒரு குறிப்பிட்ட தேவையிருக்கிறது. சடுதியாக நடக்கவிருந்த எருசலேமின் அழிவிலிருந்து அவனையும் அவனது குடும்பத்தையும் காக்க லேகிக்கு அவசியமிருந்தது, எது உண்மையான சபை என்றறிய ஜோசப் ஸ்மித்துக்கு அவசியமிருந்தது.*

|v40

•

|v41

ஒவ்வொருவரும் ஜெபிக்கிறார்கள்.

|v42

•

|v43

பிதா மற்றும் குமாரனைப்பற்றிய அபிப்பிராயம் ஒவ்வொருவருக்கும் இருக்கிற
து.

|v44

•

|v45

• ஒவ்வொருவருக்கும் ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

|v46

•

|v47

• இருவரும் பிரசங்கிக்கிறார்கள்.

|v48

•

|v49

பரிசுத்த ஆவியிடமிருந்தும் தரிசனங்கள் அல்லது சொப்பனங்களால் ஒவ்வொ
ருவரும் வெளிப்படுத்தலைப் பெறுகிறார்கள்.

|v50

•

|v51

*இறுதியாக, துன்மார்க்கர்கள் அவர்களை அச்சுறுத்துகிறார்கள். லேகியும் அவனது குடும்பமும் தப்பித்து பிழைத்துக்கொள்கிறார்கள். ஜோசப் இரத்த சாட்சியாக மரித்தார்.*

|v52

*மார்மன் புத்தகத்தில் 1 நெப்பியைப் படிக்க ஆரம்பிக்க சத்தியத்தை உண்மையுடன் தேடுகிறவர்களை ஊழியக்காரர்கள் அழைப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? கர்த்தரின் ஆவியால் இந்த புத்தகம் நிரப்பபட்டுள்ளது. வெளிப்படுத்தலும் பரிசுத்த ஆவியும் தீர்க்கதரிசிகளுக்கு மட்டும் கொடுக்கப்படுவதில்லை, ஆனால் தகப்பன்மார்களுக்கும் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுகிறதென இந்த ஆரம்ப அதிகாரங்களிலேயே தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

|v53

*மார்மன் புத்தகம் முழுவதிலும் வெளிப்படுத்தல் மற்றும் பரிசுத்த ஆவியைப்பற்றிய செய்தி தொடர்கிறது. "மார்மன் புத்தகத்தையும் வெளிப்படுத்தலையும் எடுத்துவிட்டால் நமது மதம் எங்கேயிருக்கும்? நம்மிடம் எதுவுமிருக்காது" என தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தால் இந்த சத்தியங்கள் தொகுக்கப்பட்டிருக்கிறது.* (*Teachings of Presidents of the Church: Joseph Smith* [2007], 196).

|v54

*பிற்காலப் பரிசுத்தவான்களாக, வெளிப்படுத்தலால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மார்மன் புத்தகத்தைப்பற்றிய சாட்சி நம்மிடமிருக்கிறது. இந்த மதமும் அதன் கோட்பாடுகளும் மெய்யானவை என அவை நமக்கு உறுதியளிக்கின்றன (மார்மன் புத்தகம், முன்னுரையைப் பார்க்கவும்).*

|v55

*ஆவியின் காரியங்கள் பரிசுத்தமானதும் சொல்வதற்கு கடினமானதாகவுமாயிருக்கிறது. "இதோ நான் உங்களுக்குச் சொல்கிறேன், நான் உணருகிறதில் சிறிதளவாகிலும் சொல்ல என்னால் கூடாதே" (ஆல்மா 26:16) என ஆல்மாவைப் போல, நாங்கள் பிரகடனப்படுத்துகிறோம்.*

|v56

*ஆயினும், பரிசுத்த ஆவி மெய்யானவரென்றும், அவர் சாட்சிபகருபவராகவும்,*

வெளிப்படுத்துபவராகவும், தேற்றரவாளராகவும், வழிகாட்டியாகவும், இறைத்தன்மையுள்ள ஆசிரியராகவும் இருக்கிறாரென நான் சாட்சியளிக்கிறேன்.

|v57

இந்த நான்கு மூலைக்கற்களின் மேல் இந்த மெய்யான ஜீவிக்கிற சபையும் இந்த மதமும் அமைந்திருக்கிறதென தாழ்மையுடன் நான் சாட்சியளிக்கிறேன். மூலைக்கல்லை அமைப்பதில் இயேசு கிறிஸ்து ஈடுபட்டிருக்கிறாரென நான் சாட்சியளிக்கிறேன் (எபேசியர் 2:19--21 பார்க்கவும்). தலைவர் தாமஸ் எஸ். மான்சன் கர்த்தரின் தீர்க்கதரிசியாயும், என் பின்பக்கம் அமர்ந்திருக்கும் இந்த 15 மனிதர்களும் தீர்க்கதரிசிகள், ஞானதிருஷ்டிக்காரர்கள், அப்போஸ்தலர்கள், வெளிப்படுத்துபவர்களாயுமிருக்கிறார்கள். பரிசுத்த ஆசாரியத்துவத்தையும் இராஜ்யத்தின் திறவுகோல்களையும் அவர்கள் தரித்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் அவர்களை நேசித்து, மரியாதை செலுத்தி, ஆதரிக்கிறேன், ஆமென்.

|v58

லியஹோனா

|v59

நவம்பர் 2010